**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No. 58/2013**

Deposition of witness for : PW .10

Name : மருத்துவர் மனோகரன்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 16th day of July 2025.

**எதிரிகள் 01 முதல் 04, 06 முதல் 09, 13 ஆஜர். 10, 12 எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 14–ஆம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ராய வேலூர் நருவி தனியார் மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.01.2011–ல் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்த சமயம் அன்று இரவு சுமார் 10.50 மணியளவில் லதா க/பெ முருகன் வயது 29 என்ற நபர் 23 கிழக்கு தெரு, 8 ஜான்சன்பேட்டை, சேலம்–7 என்ற நபர்

சிகிச்சைக்காக அவருடைய மாமனார் வீரப்பன் என்பவரால் அழைத்து வரபட்டவரை விசாரித்தபோது தான் 22.01.2011 அன்று இரவு 09.45 மணியளவில் அடையாளம் தெரியாத 12 நபர்களால் மேற்படி முகவரியில் வைத்து கட்டையால் தாக்கபட்டதாக கூறியவரை பரிசோதித்த போது , அவர் சுயநினைவுடன் இருந்தார், உதட்டில் இரத்த காயம் இருந்தது, மூச்சுவிட சிரமமாக இருந்ததாக சொன்னார், அவரை உள்நோயாளியாக என்.எப்.எஸ் வார்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு தலைபகுதியில் நுண்கதிர் படம் எடுக்க அனுமதிக்கப்பட்டது. அதுகுறித்து நான் பதிவு செய்து வழங்கிய விபத்து பதிவேட்டு கார்பன் நகல் இதுதான். இது அ.சா.ஆ-26 ஆகும்.

மேற்படி நபர் தகவல் அளிக்காமல் தாமாகவே சிகிச்சையில் இருந்து 23.01.2011-ல் வெளியேறிவிட்டார். எனவே அவருக்கு மேற்பட்ட காயம் குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று சான்று வழங்கினேன். அந்த சான்று இதுதான் அது அ.சா.ஆ-27 ஆகும்.

**<u>03-ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ-27 ல் இணைக்கப்பட்டு உள்ள படிவத்தின் தலைப்பில் அடிதடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கமாக சட்டம் சார்ந்த குற்றச் சம்பவங்களைப் பொருத்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்படும் என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ-26, 27 ல் காணப்படுகின்ற காயம்பட்ட நபரின் இரண்டு விலாசங்களும் ஒன்று என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ-26, 27-ல் காயம்பட்ட நபருக்கு நுண்கதிரி படம் எடுக்கப்பட்டதா என்று சொன்னால் அவ்வாறு குறியதற்கு நினைவுல்லை. அ.சா.ஆ-26, 27-ல் காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்ட நபரின் ஐ.பி.எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று

சொன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. காயம்பட்ட நபர் சிகிச்சையில் இருந்து வெளி –யேறுவது குறித்து விருப்பம் தெரிவித்தால் அவரிடம் கையெழுத்து பெற்று அனுப்பி வைக்கப்படுவார். காயம்பட்ட நபர் தெரிவித்த சங்கதியைதான் அ.சா.ஆ–26, 27 ல் குறிப்பிட்டு உள்ளேன்.

<u>எதிரிகள் 8, 9, 10, 14– தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ நேரம் குறித்து காயம்பட்ட நபர் 10.30 என்றுதான் தகவல் தெரிவித்துள்ளார் என்றாலும் அதைத்தான் விபத்து பதிவேட்டு நகலிலும் அ.சா.ஆ–27 ளிலும் குறிப்பிட்டு உள்ளேன் என்றாலும் அது அரசு தரப்பு வழக்கிற்கு பாதிக்கபாக அமையும் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பின்னிட்டு சம்பவ நேரம் 09.45 என் அடித்தம்செய்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் நோயாளி அளித்த தகவலின் பேரில் அடித்து திருத்தம் செய்யப்பட்டது. அ.சா.ஆ–26 காயம்பட்ட நபர் தகவல் அளித்தவுடன் 22.01.2011–ல் தயார் செய்யப்பட்டது. அ.சா.ஆ–27 ல் இரண்டாம் தாள் 22.01.2011–ல் தயார் செய்யப்பட்டது. முதல்தாள் 23.01.2011–ல் தயார் செய்யப்பட்டது. காயம்பட்ட நபர் சம்பவ நேரத்தை தவறுதலாக சொல்லி பின்னிட்டு திருத்தம் செய்யப்பட்டிருப்பின் அ.சா.ஆ–26 ல் மட்டும்தான் அவ்வாறான திருத்தம் காணப்பட்டிருக்கும் என்றாலும் அ.சா.ஆ–26 மற்றும் அ.சா.ஆ–27 முதல்தாளில் கண்ட திருத்தம்போல ஏற்பட வாய்ப்பு இல்லை என்றாலும் பின்னிட்டு தயார் செய்யப்பட்டிருப்பதால்தான் இரண்டு ஆவணங்களிலும் ஒரே மாதிரியான அடித்தம் திருத்தம் காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல.

குறிப்பாக உதட்டில் எந்த இடத்தில் இரத்த காயம் என குறிப்பி எதுவும் அ.சா.ஆ–26 ல் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காயத்தின் அளவுகளும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

காயம்பட்ட நபருக்கு பேச சிரமமாக இருப்பதாக காணப்பட்ட சங்கதி அவரால் பொய்யாக கூட சொல்லி இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு மூச்சுவிட சிரமம் இருப்பதாக அ.சா.ஆ–26 ல் குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

**<u>2, 4 –ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

காயம்பட்ட நபர் அடையாளம் தெரியாத 12 நபர்களால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததாக சொன்னால் சரிதான்.

1, 6, 7, 12, 13 எதிரிகள் தரப்பில் ஏனைய எதிரிகளின் குறுக்குவிசாரணையை ஏற்றுக் கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டு பதிவுசெய்யப்படுகிறது.

## <u>மறுவிசாரணை இல்லை</u>

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**
**Sessions Case No. 58/2013**

Deposition of witness for : PW-11

Name : முருகேசன்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 16th day of July 2025.

**எதிரிகள் ஆஜர். மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாநகரம் காரிப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 23.01.2011-ஆம் தேதியன்று அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த -போது அஸ்தம்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை பணி மருத்துவரிடம் கொடுத்தும் பின்னர் சடலக் கூறாய்விற்காக நியமிக்கபட்ட மருத்துவரிடம் சவக் கிடங்கில் வைக்கப் பட்டிருந்த இந்த வழக்கில் இறந்துபோன செந்தில்வேல் வயது 28 என்ற ஆண் சடலத்தை மருத்துவரிடம் அடையாம் காட்டினேன். பிரேத

பரிசோதனைக்கு பிறகு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட சடலத்தில் இருந்த இரத்த கரை கிழிந்த நிலையில் இருந்த புளூ கலர் பேண்ட், இரத்த கரை படிந்து கிழிந்த நிலையில் இருந்த நீல நிற அரைகை சட்டை, பச்சை கலர் ஜட்டியையும், ஒரு ஜோடி செருப்பு மற்றும் பெல்ட் ஒன்றினையும் ஒப்படைத்ததை பெற்றுக் கொண்டேன். அதனை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அவைகள் நீதிமன்றத்தில் உள்ளவைதான். அவைகள் இரத்த கரை படிந்த கிழிந்த நிலையில் இருந்த புளூ கலர் பேண்ட் **சா.பொ–23** ஆகும். இரத்த கரை படிந்து கிழிந்த நிலையில் இருந்த நீல நிற அரைகை சட்டை **சா.பொ–24** ஆகும், பச்சை கலர் ஜட்டி **சா.பொ–25** ஆகும், ஒரு ஜோடி செருப்பு **சா.பொ–26** ஆகும் மற்றும் பெல்ட் **சா.பொ–27** ஆகும். 24.01.2011–ஆம் தேதியன்று சடலத்தில் இருந்து சேகரம் செய்யப்பட் உள்ளுருப்புகளை ஆய்விற்காக சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். 23.02.2011–ஆம் தேதியன்று சேலம் நீதித் –துறை நடுவர் எண்.03 அவர்களிடம் ஒப்படைத்த கடிதம் மற்றும் சீல் இடப்பட்ட பொருட்களை சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இச்சம்பவம் குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>03–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சடலத்தின் அடையாள அட்டையை மருத்துவரிடம் வழங்கினாரா என்றால் கொடுக்கவில்லை. சவத்தை சவக்கிடங்கில் வைப்பதற்கு அனுமதி சீட்டு கொடுப்பார்கள். குறிப்பாக என்னுடைய கு.வி.மு.ச பிரிவு 161(3) படியான வாக்குமூலத்தில் சடலத்தில் இருந்த துணிமணிகள் என்று குறிப்பிட்டுள்ளேனே தவிர என்ன என்ன துணிகள் என்று குறிப்

–பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடபடவில்லை. உள்ளுருப்புகளை ஆய்விற்கு அனுப்ப என்னிடம் ஒப்படைத்தபோது அது வைக்கப்பட்டிருந்த குடுவை முறையாக மூடி முத்திரையிடப்பட்டு பட்டியல் இடப்பட்டிருந்த –தாக என் கு.வி.மு.ச பிரிவு161(3) படியான வாக்குமூலத்தில் குறிப் பிட்டிருந்தேனா என்றால் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறு குறிப்பிடப் படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பாக இரத்த கரை படித்த துணிமணிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இறந்து போன நபரின் சடலத்தை 23.01.2011 அன்று காலை 08.00 மணியளவில் சேலம் அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தேன். 23.01.2011–ஆம் தேதி யன்று 08.00 மணிக்கு முன்பாக மேற்படி சடலம் சவம் எங்கு இருந்தது யார் வசம் இருந்தது என்ற விவரத்தை என்னுடைய போலிஸ் விசாரணை –யிலும் முதல் விசாரணையிலும் நான் சொல்லியிருக்கவில்லை என்றால் சரிதான்.

**1, 6, 7, 13, 2, 4, 12–ஆம் எதிரிகள் மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டு பதிவுசெய்யப்படுகிறது.**

**8, 9, 10, 14–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

துணிமணிகள் கிழிந்திருந்ததை பார்த்தேன். குறிப்பாக எங்கெங்கு கிழிந்திருந்து என்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. சா.பொ–23 முதல் சா.பொ–27 வரை உள்ள பொருட்கள் தவிர வேற எந்த பொருட்களும் சவத்தில் இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 58/2013

Deposition of witness for : PW-12

Name : ராஜேந்திரன்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 16th day of July 2025.

**எதிரிகள் ஆஜர். மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:–**

நான் காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று உள்ளேன். தற்போது சேலம் பேர்லண்ஸில் குடியிருந்து வருகிறேன். சேலம் மாநகரத்தில் ஜே.ஏ.பி.யூ சிறப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக கடந்த 2011–ஆம் ஆண்டு பணிபுரிந்தசமயம் அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் விடுப்பில் சென்றதால் மேற்படி நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்தேன். 22.01.2011–ஆம் தேதியன்று இரவு 23.00

மணியளவில் நிலையத்தில் இருந்தபோது சேலம் அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலினை பெற்று அங்குச் சென்று இன்டிமேசனை பெற்று மேற்படி அரசு மருத்துவ மனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிரேமலதா என்பவரிடம் விசாரணை செய்தபோது கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து அவரின் கையெழுத்தை பெற்று நிலையம் வந்து மேற்படி வாக்கு மூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 142/2011–ல் இ.த.சா. பிரிவு 147, 148, 307, 302 பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவுசெய்தேன். நான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ–28** ஆக குறியீடு செய்யப் படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் வாக்கு மூலத்தை கனம் நீதித்துறை நடுவர் எண்.03 சேலம் அவர்களுக்கு விரைவு தபால் மூலம் அனுப்பி வைத்தும் இதர நகல்களை உரிய அதிகாரி களுக்கு அனுப்பி வைத்தும் இந்த வழக்கின் புலன் விசாரணையை எடுத்துக் கொண்டு விசாரணை நிமித்தம் 23.01.2011 அன்று அதிகாலை 01.45 மணியளவில் அஸ்தம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேற்கு விநாயகர் கோவில் தெருவில் பொது கழிப்பிடம் முன்பாக வெட்டுப்பட்டு இறந்து கிடந்த செந்தில்வேல் த/பெ. கணேசன் வயது 28 என்பவரின் சடலத்தை பார்வையிட்டு சாட்சிகள் மனோகரன், ரமேஷ் முன்பாக மேற்படி இடம் குறித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். இந்த பார்வை மகசர் அ.சா.ஆ–2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் (2 வரிசை) **அ.சா.ஆ–29** ஆக குறியீடு செய்யப் பட்டுள்ளது. சாட்சிகள் பிரேமலதா, பாப்பாத்தி, ரேவதி ஆகியோர்களை

விசாரணை செய்து கு.வி.மு.சா.161(3) மூலம் தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. பஞ்சாயத்தாரர்கள் ஜெயராமன், பொன்னுசாமி, சேகர், ஜெயகுமார், முருகேசன் மற்றும் சாட்சிகள் பாப்பாத்தி, ரேவதி, தனபால், சந்திரசேகர் ஆகியோர்கள் முன்பாக இறந்துகிடந்த செந்தில்வேல் பிரேதத்தின்மீது 23.01.2011–ஆம் தேதியன்று அதிகாலை 03.00 மணியளவில் ஆரம்பித்து பிரேத விசாரணை துவக்கி 06.30 மணி –யளவில் பிரேத விசாரணை முடிக்கப்பட்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். இந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ–30** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிரேத விசாரணை முடித்து பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கைபெற வேண்டி முதல்நிலைக் காவலர் 561 முருகேசன் அவர்கள் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் சேலம் அரசு மருத்துவமனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்தேன். சாட்சிகள் மனோகரன், ரமேஷ் முன்பாக அன்றே 06.45 மணிக்கு மேற்கு விநாயகர் கோவில்தெரு, பொது கழிப்பிடம்அருகில் சம்பவ இடத்தில் காணப்பட்ட

01. இரத்த கரையுடன் கூடிய சிமெண்டு தரையில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட மண் சிறிதளவு

02. இரத்த கரை இல்லாத சிமெண்டு தரையில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட மண் சிறிதளவு

03. கிங்பிஷர் என்ற பெயர் உள்ள மூடி இல்லாத பீர் பாட்டில் ஒன்றினையும்

04. இரத்த கரையுடன் உடைந்த நிலையில் உள்ள கிங்பிஷர் பீர் பாட்டில் ஒன்று,

05. மூடியுடன் காலியாக உள்ள கார்டினல் பிராந்தி பாட்டில் 180ml அளவுள்ளது ஒன்று

06. மூடியில்லாமல் எம்.ஜி.எம் வோட்கா என்று எழுதப்பட்ட காலி பிராந்தி பாட்டில் சிறியது ஒன்று

07. எவர் சில்வர் சொம்பு ஒன்று,

08. பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று,

09. TN21 Q 5214 என்ற எண்ணில் உள்ள கேளிபர் 115 மோட்டார் சைக்கில்

ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் மேற்படி சாட்சிகள் முன்பாக கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ–03 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொருட்கள் சான்றுபொருள் 01 முதல் 09 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அதே சாட்சிகள் முன்பாக அன்றைய தினம் காலை 07.30 மணியளவில் சம்பவ இடம் பொது கழிப்பிடஇடம் அருகில் உள்ள தார் ரோட்டிற்குச் சென்று இரத்த கரை படிந்த தார் ரோட்டில் பெயர்த்து எடுக்கப்பட்ட இரத்த கரை படிந்த சிறிது தாருடன்கூடிய ஜல்லி சிறிளவும், இரத்த கரை படியாத தார் ரோட்டில் ஜல்லி மாதிரியையும், DAXIAN என்ற பெயர் பதிந்த செல்போன் ஒன்றினையும் மேற்படி சாட்சிகள் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்படி மகசர் ஏற்கனவே அ.சா.ஆ–04 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் கண்டுள்ள பொருட்கள் 10 முதல் 12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றே காலை 08.00 மணியளவில் பொது கழிப்பிடம் முன்பாக உள்ள தார் ரோட்டில் இருந்து தெற்கு திசையில் ரோட்டின் ஓரம் நிறுத்தப்பட்டிருந்த டாட்டா இண்டிகா

கார் டி.எண். 10 ஆர்.9563 வெள்ளை நிறம் மற்றும் கருநீல கலர் ஹண்டாய் கார் TN.04 L4027 என்ற காரையும் மேற்படி சாட்சிகள் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ–05 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள TN10 R9563 பதிவெண் கொண்ட டாட்டா இண்டிகா கார் மற்றும் ஹண்டாய் கார் TN.04 L4027 என்ற காரையும் அதன் உரிமையாளர்களால் இடைக்கால பாதுகாப்பில் பெறப்பட்டது. படிவம் 95–ல் கண்டுள்ள TN10 R9563 பதிவெண் கொண்ட டாட்டா இண்டிகா கார் குறிப்பு **சா.பொ–28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஹண்டாய் கார் பதிவெண் TN.04 L4027 கொண்ட கார் **சா.பொ–29** ஆக குறியீடு செய்யப் –படுகிறது.

அன்றை தினமே சாட்சிகள் சித்தேஷ்வரன், யுவராஜ், ஜெகதீஸ்வரன், மனோகரன், ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து கு.வி.சா 161(3) மூலம் தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தின் மேல் இருந்த சொத்துக்களை காவலர் முருகேசன் பிரேத பரிசோதனை முடித்தபின்பு நிலையத்தில் ஆஜர் செய்ததை படிவம் 95 மூலமாக பெற்றேன். கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலமாக, விசாரணை செய்த பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகள், வாக்குமூலங்கள் மாதிர வரைபடம் மற்றும் மகசர்களை கனம் நீதித்துறை நடுவர் எண். 03 சேலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 95 நான்கு எண்ணிக்கைகள் **அ.சா.ஆ–31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.01.2011 அன்று சாட்சிகள்

இளங்கோவன், புஸ்பராஜ், தமிழ்செல்வி ஆகீயோர்களை விசாரித்து கு.வி.சா 161(3) படியாக தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

25.01.2011 தேதியன்று காலை 11.00 மணிக்கு அஸ்தம்பட்டி காவல் நிலைய சரகம் ஏற்காடு மெயின்ரோடு முனியப்பன் கோவில் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி (01) திலிப் என்ற திலிப்குமார்( A11) (02) விஜி (எ) விஜயகுமார்( A12) (03) கோபி (எ) கோபிநாத் (A13) ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்தும் சாட்சியத்திற்காக மனோகரன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை வரவழைத்து அவ்விடத்தில் வைத்து எதிரி திலிப் என்ற திலிப்குமாரை விசாரிக்க தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவு செய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை சென்ரல் ஜெயில் பின்புறம் உள்ள முள்ளுக்காட்டிற்கு அழைத்துச் சென்றால் மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்திய வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறினார். அன்றே 13.00 மணிக்கு விஜி (எ) விஜயகுமாரை விசாரிக்க தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை சென்ரல் ஜெயில் பின்புறம் உள்ள முள்ளுக்காட்டிற்கு அழைத்துச் சென்றால் மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்திய உருட்டுகட்டையை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறினார். அன்றே 14.30 மணிக்கு கோபி (எ) கோபிநாத்தை விசாரிக்க தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை சென்ரல்

ஜெயில் பின்புறம் உள்ள முள்ளுக் காட்டிற்கு அழைத்துச் சென்றால் மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்திய உருட்டு கட்டையை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறினார். மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரிகள் மற்றும் சாட்சிகளை அழைத்துக் கொண்டு 25.01.2011 தேதியன்று 16.30 மணிக்கு சேலம் சென்ரல் ஜெயில் பின்புறம் எதிரி திலிப் (எ) திலிப்குமார் தென்றல் நகர் ரோட்டில் முட்புதரில் போட்டு வைத்திருந்த சுமார் 11.00 செ.மீ நீளமுள்ள மரகைப்பிடி, 02.00 செ.மீ இரும்புதூனுடன் , சுமார் 45.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்ய சாட்சிகள் மனோகரன், ரமேஷ் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.06 ஆக ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருக் கிறது. அந்த ஆயுதம் ஏற்கனவே சா.பொ–13 ஆக குறியீடு செய்யப் பட்டுள்ளது. எதிரி திலிப் (எ) திலிப்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ–32** ஆக குறியீடு செய்யப் படுகிறது.

25.01.2011 தேதியன்று 17.00 மணிக்கு சேலம் சென்ரல் ஜெயில் பின்புறம் எதிரி விஜி (எ) விஜயகுமார் தென்றல் நகர் ரோட்டில் முட்புதரில் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதம் சுமார் 61.00 செ.மீ நீளமுள்ள சவுக்கு உருட்டு கட்டை ஒன்று எடுத்து ஆஜர் செய்ய சாட்சிகள் மனோகரன், ரமேஷ் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.07 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப் பட்டிருக்கிறது. அந்த ஆயுதம் ஏற்கனவே சா.பொ–14 ஆக குறியீடு செய்யப் பட்டுள்ளது. எதிரி விஜி (எ) விஜயகுமார் கொடுத்த ஒப்புதல் வாக்கு

மூலத்தில் அனுமதிக்கப்பட்டபகுதி **அ.சா.ஆ−33** ஆக குறியீடு செய்யப் படுகிறது. 25.01.2011 தேதியன்று 17.30 மணிக்கு சேலம் சென்ரல் ஜெயில் பின்புறம் எதிரி கோபி (எ) கோபிநாத் தென்றல் நகர் ரோட்டில் முட்புதரில் மறைத்து வைத்திருந்த சுமார் 73.00 செ.மீ நீளமுள்ள சவுக்கு உருட்டு கட்டை எடுத்து ஆஜர் செய்ய சாட்சிகள் மனோகரன், ரமேஷ் முன்பாக கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.08 ஆக ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆயுதம் ஏற்கனவே சா.பொ−15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி திலிப் (எ) திலிப்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டபகுதி **அ.சா.ஆ−34** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி எதிரிகள் திலிப் (எ) திலிப்குமார், விஜி (எ) விஜயகுமார், கோபி (எ) கோபிநாத் ஆகியோர்களை நிலையம் கொண்டு வந்து 25.01.2011 அன்று திரேக பரிசோதனை செய்து அடைப்பு காவல் அறிக்கையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர், கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 எண்ணிக்கை 3 ஆகும். அந்த படிவம் **அ.சா.ஆ−35** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

26.01.2011−ஆம் தேதியன்று சாட்சிகள் சேகர், பரணி ஆகியோர்களை விசாரித்து குவிமுச பிரிவு 161(3) மூலம் தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மேலும் சில

எதிரிகளான பாலு (எ) பாலகிருஷ்ணன்( A1), கரிகாலன், சிக்கந்தர் ஆகியோர்களை 24.01.2011 அன்று பொள்ளாட்சி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி கோவை மத்திய சிறையில் அடைக்கப் பட்டதாக தகவல் கிடைத்தது. 25.01.2011 அன்று மணி (எ) கேரளா மணி , முரளி (எ) முரளி கிருஷ்ணா ஆகியோர் சங்ககிரி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 01 சரண்டர் ஆகி சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. அதுபோல 27.01.2011 அன்று எதிரி வினோத் (எ) வினோத்குமார் மேட்டுர் நீதித்துறை நடுவர் எண். 02 ல் சரண்டர் ஆகி சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. அதுபோலவே 31.01.2011 அன்று எதிரி பிரதாப் என்பவர் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. 31.01.2011 அன்று எதிரிகள் பாலு(எ) பாலகிருஷ்ணன், கரிகாலன், சிக்கந்தர் ஆகியோர்களை போலிஸ் காவலில் எடுத்து விசாரிப்பதற்காக கனம் நீதித்துறை நடுவர் எண். 03 சேலம் அவர்களிடம் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு மேற்படி 3 நபர்களையும் 01.02.2011 அன்று 16.45 மணியளவில் போலிஸ் காவலில் பெற்று அஸ்தம்பட்டி காவல்நிலையத்தில் பாதுகாவலில் வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து சாட்சிகள் சுந்தரம், ராஜகோபால் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்ட போது 01.02.2011 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் எதிரி பாலு (எ)

பாலகிருஷ்ணன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்துச் சென்றால் இந்த வழக்கில் தான் பயன்படுத்திய வீச்சு அருவாளை ஆத்துக்காட்டில் மறைத்து வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி கரிகாலன் அதே தினம் 20.45 மணியளவில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்துச் சென்றால் இந்த வழக்கில் தான் பயன்படுத்திய வீச்சு அருவாளை ஆத்துக்காட்டில் மறைத்து வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். எதிரி சிக்கந்தர் 02.02.2011 அன்று 00.00 (24 மணி) மணிக்கு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்துச் சென்றால் இந்த வழக்கில் தான் பயன்படுத்திய வீச்சு அருவாளை ஆத்துக்காட்டில் மறைத்து வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். எதிரிகள் மற்றும் சாட்சிகள் உடன் 02.02.2011 அன்று காலை 07.00 மணியளவில் ஆத்துக்காடு பாலத்தின் இடதுபுறம் உள்ள முள்ளுக்காட்டில் இருந்து எதிரி பாலு (எ) பாலகிருஷ்ணன் எடுத்து ஆஜர் செய்த சுமார் 38.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ−17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீச்சருவாள் சா.பொ−19 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியின் ஒப்புதல்

வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி அ.சா.ஆ–18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

02.02.2011 அன்று காலை 07.30 மணியளவில் ஆத்துக்காடு பாலத்தின் இடதுபுறம் உள்ள முள்ளுக்காட்டில் இருந்து எதிரி கரிகாலன் எடுத்து ஆஜர் செய்த சுமார் 35.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–19 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீச்சருவாள் சா.பொ–20 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி அ.சா.ஆ–20 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

02.02.2011 அன்று காலை 08.00 மணியளவில் ஆத்துக்காடு பாலத்தின் இடதுபுறம் உள்ள முள்ளுக்காட்டில் இருந்து எதிரி சிக்கந்தர் எடுத்து ஆஜர் செய்த சுமார் 38.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–21 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீச்சருவாள் சா.பொ–21 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி அ.சா.ஆ–22 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.அன்றே காலை 10.30 மணியளவில் சேலம் மாவட்டம், தீவட்டிப்பட்டி பஸ் நிறுத்தம் அருகில் உள்ள குமார் சைக்கிள் ஸ்டேன்டில் இந்த வழக்கின் எதிரி கரிகாலன் சம்பவ சமயத்தில் பயன்படுத்திய புளூ கலர் பஜாஜ் 100 TN30

L8105 என்ற வாகனத்தை நிறுத்தியிருந்ததை மேற்படி எதிரி அடையாளம் காட்ட கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முன்னி லையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–23 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் ச.பொ–22 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரிகளை நிலையம் அழைத்து வந்து 22.02.2011 அன்று போலிஸ் காவல் முடித்து மீண்டும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டுகோள் கடிதத்துடன் கனம் நீதித்துறை நடுவர்எண். 03 க்கு ஆஜர் செய்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலமாகவும், எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பிறகு சாட்சிகள் சுந்தரம், ராஜகோபால் ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக குவிமுச பிரிவு 161(3) மூலம் விசாரணை செய்தேன். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 95 (4 எண்ணிக்கைகள்) **அ.சா.ஆ–36** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் குமார், ராசத் ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக குவிமுச பிரிவு 161(3) மூலம் விசாரணை செய்தேன்.

02.02.2011 அன்று எதிரிகள் கார்த்திக், பிரதாப், வினோத் (எ) வினோத்குமார், முரளி (எ) முரளிகிருஷ்ணா, மணி (எ) கேரளா மணி ஆகியோர்களை விசாரணை நிமித்தம் போலிஸ் காவலில் எடுத்து விசாரிக்கவேண்டி வேண்டுகோள் கடிதத்தினை கனம் நீதித்துறை நடுவர்

எண். 03 அவர்களிடம் தாக்கல் செய்து அனுமதியின் பேரில் 04.02.2011 அன்று 16.00 மணியவில் மேற்படி எதிரிகளை என்வசம் பெற்று நிலையம் அழைத்துவந்து சாட்சிகள் மனோகரன், ரமேஷ் ஆகியோர்கள் முன்பு 17.00 மணிக்கு விசாரணை செய்தபோது எதிரி கார்த்திக் (எ) நெட்டை கார்த்திக் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன். மேற்படி எதிரி தன்னை அழைத்துச் சென்றால் அஸ்தம்பட்டி வாட்டர் டேங் பின்புறம் உள்ள முட்புதரில் தான் மறைத்து வைத்துள்ள வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார்.

பிறகு அன்றைய தினமே 19.00 மணியளவில் எதிரியை விசாரணை செய்தபோது எதிரி பிரதாப் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன். மேற்படி எதிரி தன்னை அழைத்துச் சென்றால் தென்றல் நகரில் இருந்து ஆத்துக்காடு செல்லும் வழியில் பெரியாண்டிச்சி கோவில் அருகில் உள்ள புதரில் மறைத்து வைத்துள்ள வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அன்றே 21.00 மணிக்கு விசாரணை செய்தபோது எதிரி வினோத் (எ) வினோத்குமார் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன். மேற்படி எதிரி தன்னை அழைத்துச் சென்றால் தென்றல் நகரில் இருந்து ஆத்துக்காடு செல்லும் வழியில் விநாயகர் கோவில் அருகில் உள்ள புதரில் தான் மறைத்து வைத்துள்ள வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அன்றே 22.00 மணிக்கு விசாரணை செய்தபோது எதிரி முரளி (எ) முரளிகிருஷ்ணா தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல்

வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன். மேற்படி எதிரி தன்னை அழைத்துச் சென்றால் தென்றல் நகரில் இருந்து ஆத்துக்காடு செல்லும் வழியில் விநாயகர் கோவில் அருகில் உள்ள புதரில் தான் மறைத்து வைத்துள்ள வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அன்றே 23.00 மணிக்கு விசாரணை செய்தபோது எதிரி மணி (எ) கேரளாமணி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சிகள் முன்பு பதிவுசெய்தேன். மேற்படி எதிரி தன்னை அழைத்துச் சென்றால் தென்றல் நகரில் இருந்து ஆத்துக்காடு செல்லும் வழியில் பெரியாண்டிச்சி கோவில் அருகில் உள்ள புதரில் தான் மறைத்து வைத்துள்ள வீச்சு அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார்.

மேற்படி எதிரிகளின் தகவலின் பேரில் 05.02.2011 அன்று காலை 07.30 மணியளவில் மேற்படி சாட்சிகளையும் எதிரிகளையும் அழைத்துக் கொண்டு அஸ்தம்பட்டி வாட்டர் டேங்க் பின்புறம் சென்றபோது எதிரி கார்த்திக் (எ) நெட்டை கார்த்திக் அங்கிருந்த முட்புதரில் இருந்து மறைத்துவைத்திருந்த சுமார் 37.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–09 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆய்தம் சா.பொ–16 (5 வரிசைகளாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது) எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ–37** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே சுமார் 08.15 மணியளவில் எதிரி பிரதாப் ஆத்துக்காடு செல்லும் வழியில் உள்ள பெரியாண்டிச்சி கோவில் அருகில் உள்ள முட்புதரில் இருந்து தான்

மறைத்து வைத்திருந்த சுமார் 37.05 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாள் ஒன்றினை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். அது கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–10 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆய்தம் சா.பொ–16 ல் அடங்கும். எதிரி பிரதாப் கொடுத்த வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டபகுதி **அ.சா.ஆ–38** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே காலை 09.00 மணியளவில் வினோத் (எ) வினோத்குமார் ஆத்துக்காடு செல்லும் வழியில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த சுமார் 43.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாள் ஒன்றினை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–11 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆய்தம் சா.பொ–16 ல் அடங்கும். மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி **அ.சா.ஆ–39** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினமே காலை 09.45 மணியளவில் முரளி (எ) முரளிகிருஷ்ணா ஆத்துக்காடு செல்லும் வழியில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த சுமார் 37.05 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாள் ஒன்றினை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆய்தம் சா.பொ–16 ல் அடங்கும். மேற்படி

எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி **அ.சா.ஆ–40** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே காலை 10.30 மணியளவில் மணி (எ) கேரளா மணி ஆத்துக்காடு செல்லும் வழியில் உள்ள பெரியாண்டிச்சி கோவில் அருகில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த சுமார் 37.00 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாள் ஒன்றினை எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆய்தம் சா.பொ–16 ல் அடங்கும். மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதி **அ.சா.ஆ–41** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிறகு மேற்படி சாட்சிகள் மனோகரன், ரமேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து குவிமுச பிரிவு 161(3) மூலம் தனிதனியாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரிகள் மற்றும் சொத்துக்கள் உடன் நிலையம் வந்து போலிஸ் காவல் முடித்து மீண்டும் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த அறிக்கையுடன் கனம் நீதித்துறை நடுவர் எண். 03 அவர்களிடம் ஆஜர் செய்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 95 (5 எண்ணிக்கைகள்) **அ.சா.ஆ–42** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் சாட்சிகளின் வாக்கு மூலங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட கார்த்திக் (எ) எலும்பன் கார்த்திக் என்பவர் கிருஷ்ணகிரி

நீதித்துறை நடுவர் எண். 02 அவர்களிடம் முன்பு சரண்டர் ஆகி சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. 08.02.2011 அன்று மேற்படி எதிரியை விசாரணை செய்யவேண்டி போலிஸ் காவல் எடுக்க விண்ணப்ப வேண்டுகோள் கடிதத்தினை கனம் நீதித்துறை நடுவர் எண். 02 அவர்களிடம் தாக்கல் செய்து அனுமதி பெற்று 09.02.2011 அன்று 18.00 மணிக்கு கார்த்திக் (எ) எலும்பன் கார்த்திக்யை போலிஸ் காவல் பெற்று நிலையம் அழைத்து வந்து சாட்சிகள் மனோகரன் , ரமேஷ் முன்னிலையில் விசாரணை செய்தபோது எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். மேற்படி எதிரி கொடுத்த தகவலின் அடிப்படையில் 17.30 மணியளவில் மேற்படி சாட்சிகளையும், எதிரியையும் அஸ்தம்பட்டி வாட்டர் டேங்க் பின்புறம் அழைத்துச் சென்றபோது எதிரி கார்த்திக் (எ) எலும்பன் கார்த்திக் மேற்படி முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 37.05 செ.மீ நீளமுள்ள வீச்சு அருவாள் ஒன்றினை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ–14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆய்தம் சா.பொ–17 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்டப் பகுதி **அ.சா.ஆ–43** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு சாட்சி ரமேஷ், மனோகரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி கார்த்திக் (எ) எலும்பன் கார்த்தியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த அறிக்கையுடன் கனம் நீதித்துறை நடுவர் எண். 03 அவர்களிடம் ஆஜர் செய்தேன். எதிரியின்

ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலமாக சாட்சிகளுடன் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ–44** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இந்நிலையில் நான் தருமபுரி மாவட்டத்திற்கு 13.02.2011 அன்று பணிமாறுதல் பெற்றமையால் இந்த வழக்கின் விசாரணை கோப்பினை எனக்குபின் பொறுப்பிற்கு வந்த ஆய்வாளர் பார்வைக்கு வைத்துச் சென்றேன்.

## <u>02, 04– ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

22.01.2011 அன்று அஸ்தம்பட்டி காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக நான் இருந்தேன். மேற்படி காவல் நிலையத்தில் சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பொறுப்பு ஆய்வாளராக சேர்ந்தேன். அதுகுறித்த குறிப்பு இந்த வழக்கில் காணப்படவில்லை என்று சொன்னால் நிலைய நாட்குறிப்பேட்டில் உள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–28 ல் நான் மேற்படி நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் என்ற குறிப்பு காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் கையெழுத்து இடும்போது முத்திரையில் பொறுப்பு ஆய்வாளர் என குறிப்பிடப்பட்டுள்ளது. சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புறக்காவல்

நிலையத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் நான் மருத்துவ –மனை சென்றேன். அதுகுறித்த சங்கதியை பொதுநாட்குறிப்பில் பதிந்துள்ளேன். அ.சா.ஆ– 27 ல் இரண்டாம் பக்கத்தில் இரண்டாம் தாளில் 21.01.2011 அன்று இரவு 09.45 மணியளவில் என்ற வாசகத்தில் 09.45 மணி என்பது அடித்தம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறே அ.சா.ஆ–26 விபத்து பதிவேட்டு நகல்களிலும் காணப்படுகிறது என்றாலும் சரிதான். அ.சா–01 முதல்முதலில் சிகிச்சைக்கு சேர்ந்து சம்பவம் குறித்த தகவல் அளித்த மருத்துவர் மனோகரன்(அ.சா–10) என்பவரை நான் விசாரணையின் போது விசாரித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு அவரை நான் விசாரிக்கமுடியாத காரணம் ஏதேனும் உண்டு என்றால் இல்லை. அ.சா.ஆ–26, 27 ஐ நான் பார்வையிட்டேன். அ.சா–01 ன் புகார் வாக்குமூலத்தை உங்கள் கைப்படஎழுதவில்லை என்றால் சரிதான். நான் அ.சா–01 விடம் விசாரித்தபோது அவர் சொன்ன சங்கதிகளை காவலர் எழுதினார். அதுகுறித்து வழக்கு ஆவணங்களில் குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். அ.சா–01 சிகிச்சைக்கு சேர்ந்தபோது மருத்துவரிடம் அடையாளம் தெரியாத 12 நபர்கள் தாக்கியதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் உங்களிடம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுகின்ற அ.சா.ஆ–01 ல் 11 எதிரிகளின் பெயர்களும் மற்றும் அடையாளம் தெரியாத சிலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா–01 சொல்ல சொல்ல புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. உச்சபட்ச தண்டனை வழங்கக்கூடிய வழக்காக உள்ள நிலையில் உங்கள் கைப்பட புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்யப்படாததற்கு குறிப்பிட காரணம் வழக்கு கோப்பில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் அவ்வாறு ஆய்வாளர் கைப்பட

எழுதவேண்டும் அல்லது எழுதக்கூடாது என சட்டவிதிமுறை எதுவும் இல்லை என்று குறிப்பிடப்படவில்லை. காவல் துறை தலைவரின் சுற்றறிக்கை காவல் நிலையச் சட்டங்கள் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டவர் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டவை என்று இவ்வாறு விளக்கம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ–28 என் கைப்பட தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ–28 ல் அது எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது.

மேற்படி காவல் நிலையத்தின் பொறுப்பு ஆய்வாளர் என்ற நிலையில் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து விசாரணை மேற்கொள்ள உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றேனா என்றால் அதற்கான அவசியம் இல்லை. அ.சா.ஆ–28 ல் என் தலைமையில் கலம் 3 C–பக்கம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் பகுதி எண் குறிப்பிடப் பட்டுள்ளது. 23.01.2011 அன்று நான் 10 சாட்சிகளை விசாரித்தேன். 23.01.2011 அன்று காலை 03.30 மணியளவில் கனம் நீதித்துறை நடுவர் சேலம் அவர்களிடம் அச்சு முதல்தகவல் அறிக்கை, புகார் வாக்குமூலம் சேர்க்கப்பட்டது. எதிரிகள் கரிகாலன், பிரதாப் ஆகியோர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகும் வரையில் நீதிமன்றத்தின் வாரண்ட் பெற்று அல்லது முன்அனுமதி கடிதம் அளித்தோ அவர்களின் வீட்டிற்குச் தேடிச்சென்று தோதனை செய்தீர்களா என்றால் அவர்களை தேடினேன் அவர்கள்

அவர்களுடைய வீட்டில் இல்லை. மேற்படி எதிரிகளின் அடைப்பு காவல் அறிக்கை மற்றும் போலிஸ் காவலில் விசாரிக்க அனுமதிகோரும் மனுவிலும் அவர்களின் வீட்டிற்குச் சென்று நான் தேடியதாக குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லை என்பதால் குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கு ஜோடனை செய்த வழக்கு என்பதால்தான் மேற்படி எதிரிகளின் வீட்டிற்குச் சென்று தேடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபரின் செல்போனை ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை என்று சொன்னால் குறுகிய காலமே நான் விசாரணை செய்ததால் அதற்கான அவசியம் எழவில்லை. அ.சா.ஆ–29 மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் கழிப்பறை இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் பாத்ரூம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பார்வை மகசரில் பொது கழிவறை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அ.சா.ஆ–29 மாதிரி வரைபடம் 02–ஆம் பக்கத்தில் கழிவறை ஆண், பெண் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறதா என்று சொன்னால் ஆம் விரிவாக குறிப்பிடப் பட்டிருக்கிறோம். மாதிரி வரைபடம் அ.சா.ஆ–29 ல் சவத்திற்கு அருகில் மின்விளக்கு கம்பம் எறிந்து கொண்டிருந்ததாக என்று சொன்னால் 35 அடியிலும், 65 அடியிலும் எறிந்து கொண்டிருந்ததாக குறிப்பிடப் பட்டிருந்தது. பார்வை மகசர் அ.சா.ஆ–02 ல் 35 அடி தொலைவில் விளக்கு கம்பமும், டியூப்லைட்டுடன் எறிந்து கொண்டிருப்பதாகவும், 65 தொலைவில் விளக்கு கம்பமும், டியூப்லைட்டுடன் எறிந்து கொண்டிருப் பதாகவும் குறிப்பிட்டிருந்தேன். சம்பவ இடத்தை புகைப்படமோ, வீடியோவோ எடுக்கவில்லை. இந்த வழக்கின் பார்வை மகசர், மாதிரி

வரைபடம், வாக்குமூலங்கள் எதையும் என் கைப்பட எழுதவில்லை தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்ல சொல்ல உடன் வந்த காவலர் எழுதினார். பிரேதம் கிடந்த இடத்தில் இரத்தம் கொட்டிக் கிடந்ததா அல்லது சிதறிக் கிடந்ததா என்றால் கொட்டி சிதறிக் கிடந்தது, வழிந்து சென்றும் கொண்டிருந்தது. 02-ஆம் எதிரி கரிகாலனை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தாக சொல்லப்படுகின்ற நிலையில் மேற்படி காவல் நிலையத்திற்கு மிக அருகில் தனிப்பட்ட சாட்சிகளின் நடமாட்டம், இருப்பிடம் நிறைந்த இடம் என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. அதுகுறித்து எதிரி கரிகாலனின் அடைப்பு காவல் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 02-வது எதிரி கரிகாலன் எடுத்து ஆஜர் செய்வதாக சொல்லப்படுகின்ற ஆய்தம் மறைத்து வைத்ததாக சொல்லப்படுகின்ற இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 01 கீ.மீட்டருக்குள் இருக்கும். மேற்படி இடத்திற்கு நிலையத்தில் இருந்து டெம்போ டிராவல் வாகனத்தில் சென்றோம் மேற்படி வாகனத்தின் பதிவெண், ஓட்டுநர் பெயர் வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து சொன்னவாறு அவர் கரிகாலன் சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் சொன்ன சான்றுபொருள் எதுவும் மேற்படி எதிரி எடுத்து ஆஜர் செய்து கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ-20 ஐ நான் மூடி முத்திரையிடவில்லை. சா.பொ-22 க்கு உரிய ஆவணம் எதுவும் நான்

கைப்பற்றப்படவில்லை. மேற்படி வாகனத்தை நான் சொன்னவாறு கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரில் 04–வது எதிரி பிரதாப் என்பவரிடம் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் சொன்ன சான்றுபொருள் எதுவும் மேற்படி எதிரி எடுத்து ஆஜர் செய்து கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சா.பொ–16 (வரிசைகள்) ஐ நான் மூடி முத்திரையிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் காலதாமதமாக நீதிமன்றத்தை அடைந்தது என்று சொன்னால் சரியல்ல. அ.சா–01 என்னுடைய விசாரணையில் அவருடைய தம்பி போனில் கெட்ட வார்த்தையால் திட்டியதாக சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் போனில் மிரட்டியதாக சொன்னார். அ.சா–01 சம்பவம் நடந்த முதன்முதலாக மருத்துவர் அ.சா–10 யிடம் தகவல் தெரிவித்தபோது தான் கிழக்குத் தெரு 8, ஜான்சன் பேட்டை, சேலம் என்ற இடத்தில் வைத்துதான் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருப்பதாக சொன்னால் சரியல்ல. அ.சா–01 என்னுடைய விசாரணையில் இறந்துபோன என் தம்பி செல்போன் வைத்திருந்த விபரத்தை சொல்லியிருந்தார். அ.சா–01 என்னிடம் சொல்வதுபோல் புகார் வாக்குமூலம் எதுவும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கொடுத்திருக்கவில்லை என்று சொன்னாலும், நான் எந்த சாட்சியையும் சொன்ன நேரத்தில், சொன்ன

இடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்று சொன்னாலும், சொன்ன சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நான் இந்த வழக்கில் சரியாக முதல்நிலை விசாரணை செய்திருக்க வில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன செந்தில்வேல் என்பவருக்கு நிறைய எதிரிகள் உள்ளனர் என்றாலும், நான் வேண்டும் என்றே எதிரிகள்மீது முறையாக விசாரிக்காமல் பொய்யாக வழக்குப் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா–02 விசாரணையில் தன் மகன் மோதிரம் வைத்திருந்ததை பற்றியும், போன் வைத்திருந்ததை பற்றியும் சொல்லி இருந்தாரா என்றால் மோதிரத்தை பற்றி மட்டும் சொல்லவில்லை.

**நேரமின்மை காரணமாக மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/– S. எழில்வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.